டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 7.06.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 290 - Madurai | Online Edition

# உயிரி பன்முகத் தன்மை தொடர்பான பிரத்யேக விருப்பத் தகுதிச் சான்றிதழ் திட்டம் அறிமுகம்

புது தில்லி, ஜூன் 6

மத்திய அரசின் சுற்றுச்சூழல், அமைச்சகம், தேசிய உயிரி பன்முகத்தன்மை ஆணையம் (என்பிஏ) இந்தியத் தரக் கவுன்சில், இந்தியாவில் செயல்படும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை இணைந்து, 'அணுகல், பலன் பகிர்வு ஆகியவற்றுக்கான அங்கீகாரத்திற்கான விருப்பத் தகுதிச் சான்றிதழ் திட்டத்தை (VCS-I-ABS) தொடங்கியுள்ளன. இதன் மூலம், உயிரியல் பன்முகத்தன்மைக்கான உடன்படிக்கையில் கையெழுத்திட்டு உள்ள 196 நாடுகளில், அணுகல், பலன் பகிர்வு குறித்த பிரத்யேக விருப்பத் தகுதிச் சான்றிதழ் திட்டத்தைச் செயல்படுத்தும் முதல் நாடாக இந்தியா திகழ்கிறது.

அணுகல், பலன் பகிர்வு நடைமுறைகளைச் செயல் படுத்துவதில் இந்தியா உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முன்னோடி நாடாக உள்ளது. சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் பட்ட இணக்கச் சான்றிதழ்களில் சுமார் 60% இந்தியாவினுடைய தாகும்.

இயல்பிலேயே விருப்பத்தின் அடிப்படையில் அமைந்த இத்திட்டம் (VCS-I-ABS), வணிக நிறுவனங்களுக்கு ஒரு தனித்து வமான அடையாளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உயிரியல் பன்முகத்தன்மைச் சட்டம், அதற்கான விதிகள், அணுகல், பலன் பகிர்வு ஒழுங்குமுறைகள் போன்றவற்றுக்கு இணங்கச் செயல்படும் நிறுவனங்களுக்குச் இலச்சினை (logo), சான்றிதழ் ஆகியவை வழங்குவதன் மூலம் இது சாத்திய மாக்கப்படுகிறது.

இந்தச் சின்னம் தேசிய, சர்வதேச சந்தைகளில் ஒரு தனித்து வமான அடையாளமாகத் திகழும். இது ஏபிஎஸ் விதிமுறை களைப் பின்பற்றுவதை ஊக்குவிப்பதோடு, சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் சந்தையில் முன்னிலை வகிக்கவும் புதிய சந்தைகளை அணுகவும் உதவுகிறது.

பல்லுயிர் பெருக்க நிதியளிப்பு, சமூக மேம்பாடு, பாதுகாப்பு ஆகியவற்றில் சந்தை சார்ந்த வழிமுறைகளைப் பயன் படுத்துவதில் இந்தியா ஒரு உலகளாவிய முன்னோடியாகத் திகழ்வதை இத்திட்டம் வலுப்படுத்துகிறது.

கூடுதல் தகவல் களுக்கு, secretary@nba.nic.in என்ற மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொள்ளலாம்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம்
## முறையாக தலைக் கவசம் அணிவோம்




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பெருந்துறை வட்டாரத்தில் விளைநிலங்களை காப்போம் இயக்கம் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி

ஈரோடு, ஜூன் 6

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம் பெரிய வீர சங்கிலி கிராமத்தில் வேளாண்மை துறையின் சார்பாக விளை நிலங்களை காப்போம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு பெருந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கலைச்செல்வி தலைமை தாங்கினார்.

இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலையம் ஜான் பிரபாகரன், விவசாயிகளுக்கு மண்வளப் பாதுகாப்பு மற்றும் மண் பரிசோதனை செய்வதால் ஏற்படும் நன்மைகள் உயிர் உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நுண்ணுயிர் பெருக்கம் ஆகியவற்றை விவசாயிகளுக்கு விரிவாக பயிற்சி அளித்தார்.

வேளாண்மை அலுவலர் செந்தில் செல்வி தெரிவித்ததாவது, ரசாயன உரங்களை குறைத்து இயற்கை உரங்கள் பயன் பாட்டை அதிகரிக்க செய்யவும் பசுந்தால் மற்றும் பசுந்தலை உரங்களை அதிகம் பயன்படுத்துவதால் விவசாயிகளுக்கு உரச் செலவை குறைத்தல் பற்றி விரிவாக எடுத்து கூறினார். துணை தோட்டக்கலை அலுவலர் செங்கோட்டையன் பேசுகையில், தோட்டக்கலை சார்ந்த திட்டங்களையும் விவசாயி களுக்கு தனித் துவமான அடையாள அட்டை பதிவு செய்வதை முக்கியத்து வத்தை பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட பணியாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## சாட் வகைகள் : ஓர் அலசல் ஆய்வு



### ஃப்ரூட் சாட்

**தேவையான பொருட்கள்**

வாழைப்பழம் ஒன்று

மாதுளம் பழம் ஒன்று

ஆப்பிள் பழம் ஒன்று

கொய்யாப்பழம் ஒன்று

எலுமிச்சம் பழம் அரை மூடி சாறு

சாட் மசாலா பொடி 1 தேக்கரண்டி

உப்பு, மிளகு பொடி தேவையான அளவு

**செய்முறை**

மாதுளையை நன்றாக உரித்தெடுதது கொள்ள வேண்டும். வாழைப்பழம், ஆப்பிள், கொய்யா, இவற்றை தோல் நீக்கி சிறு சிறு துண்டுகளாக ஒரு பாத்திரத்தில் சேகரித்து இதில் எலுமிச்சை சாறு, சாட் மசாலா பொடி, உப்பு, மிளகு பொடி சேர்த்து நன்றாக கலந்து குளிர வைத்து சாப்பிட வேண்டும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**



# பெரம்பலூர் கேவிகேயில் பட்டயப்படிப்பு மாணவர்களுக்கு வகுப்பு எடுத்த வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு



பெரம்பலூர், ஜூன் 6

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உரம், பூச்சி மருந்து விதை விற்பனை செய்ய உரிமம் பெற வேண்டியதற்கான பட்டாயப் படிப்பு வகுப்பில் வேளாண்மை உதவி இயக்குனர் தரகட்டப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் வகுப்பு எடுத்தார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வாலிகண்டபுரத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் ஆய்வு மையம், ஹைதராபாத்தில் உள்ள மேனேஜ் நிறுவனம், மற்றும் குடுமியான் மலையில் உள்ள சமிதி ஆகியவைகள் மூலம் இந்த பட்டய படிப்பு ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. நேற் முனைவர் பொன் விழி ரம்யா ஒருங்கிணைப்பாளர், அறிமுகம் செய்து வைத்தார். வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மை கல்லூரியில், பூச்சி இயல் துறையில் முனைவர் ஹரிப்பிரியா மற்றும் வேளாண்மை அறிவியல் மைய பயிர் பாதுகாப்பு விஞ்ஞானி டொமினிக் மனோஜ் ஆகியோர் கலந்து கொண்டு வகுப்பு எடுத்தார்கள். இதில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் மாணவர்களுக்கு இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி எடுத்துரைத்து, இயற்கை பூச்சி விரட்டி, தயாரிப்பு மற்றும் உயிரியல் காரணிகளின் நன்மைகளும், பயன்படுத்தும் முறையும் எடுத்துரைத்தார்.

முனைவர் ஹரிப்பிரியா, பயிரை தாக்கக்கூடிய பூச்சிகளின் தன்மை, அறியும் வண்ணம், நன்மை செய்யக்கூடிய பூச்சிகள், தீமை செய்யக்கூடிய பூச்சிகள் கண்டறிந்து எவ்வாறு ஒருங் கிணைந்த முறையில் கட்டுப்படுத்தும் முறையும் மற்றும் பயிர்கள் சத்து பற்றாக்குறையால் ஏற்படுகின்ற பாதிப்புகளை

பற்றியும் அதை நிவர்த்தி செய்ய வேண்டிய தொழில் நுணுக்கங்களை எடுத்துக் கூறினார். டாக்டர் டோமினிக் மனோஜ், பூச்சி மருந்துகளை எவ்வாறு பயன்படுத்தலாம், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்தை பற்றி எடுத்துரைத்தார். நேற்று நடைபெற்ற வகுப்பு தேர்வில் அனைவரும் கலந்து கொண்டனர். இதை வேளாண் உதவி இயக்குனர் தரகட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், வேளாண்மை அலுவலர் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் இளவரசி ஆகியோர் தேர்வு நடை பெற்றதை பார்வையிட்டார். வேளாண் அறிவியல் மைய தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் புனிதாவதி இதனை தெரிவித்தார்.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "Connect & Grow - Food Business Meet"

கோயம்புத்தூர், ஜூன் 6

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), கோயம் புத்தூரில் செயல்பட்டு வரும் உயிரித் தொழில்நுட்ப மகத்துவ மையம், 05 ஜுன் 2026 அன்று "Connect & Grow - Food Business Meet" என்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.



நிகழ்ச்சியில் உணவு பதப் படுத்தல் துறையில் செயல் படும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSMEs), ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில் துறை பங்குதாரர்களுக் கிடையேயான ஒத்துழைப்பை வலுப் படுத்தும் நோக்கில், துவக்க நிகழ்வில், முனைவர் எல்.அருள், துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல், அனைவரையும் வரவேற்று, வேகமாக வளர்ந்து வரும் உணவு பதப்படுத்தல் துறையில் புதுமை, மதிப்புக் கூட்டுதல் மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

முனைவர் ந.செந்தில், தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்பவியல் மையம் மற்றும், காக்ஸ்பிட் இயக்குநர், TNAPEx – புதிய தயாரிப்பு மேம்பாடு மற்றும் தொழில் நுட்ப உதவியின் மூலம் MSME–களை ஆதரிக்கும் திட்டம் குறித்து விளக்கமளித்தார். தொழில்துறை மற்றும் கல்வி நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு, புதுமை, தொழில் நுட்ப பரிமாற்றம் மற்றும் சந்தைத் தேவைகளை பூர்த்தி செய்யும் தரமான உணவுப் பொருட்கள் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றுவதாக அவர் குறிப்பிட்டார். மேலும், TNAPEx திட்டத்தின் தொழில்நுட்ப பங்குதாரராக செயல்படும் காக்ஸ்பிட், தயாரிப்பு உருவாக்கம், பரிசோதனை, தரச் சரிபார்ப்பு, ஒழுங்கு முறை வழிகாட்டுதல் மற்றும் வணிகமயமாக்கல் ஆகிய துறை

களில் தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவை வழங்கி, உணவு பதப்படுத்தல் துறையின் போட்டித்திறன் மற்றும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

முனைவர் சு.கார்த்திகேயன், இயற்கை வள மேலாண்மை இயக்குநர், அறிவியல் அடிப்படையிலான தயாரிப்பு மேம்பாட்டிற்காக ஆராய்ச்சி நிறுவனங்களும் தொழில்முனைவோரும் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தயாரிப்புகளின் தரம் மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த தயாரிப்பு பரிசோதனை, தர உத்தரவாதம் மற்றும் உணவுப் பாதுகாப்பு தரநிலைகளைப் பின்பற்றுவது அவசியம் என வலியுறுத்தினார். மேலும், NABL அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்கள் மற்றும் APEDA விதிமுறைகள் தயாரிப்புகளின் நம்பகத் தன்மையை உயர்த்துவதோடு, சந்தை அணுகலை எளிதாக்கி, ஏற்றுமதியை ஊக்குவித்து, நுகர்வோர் நம்பிக் கையை அதிகரிக்க உதவுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். அறிவியல் சரிபார்ப்புகள் மூலம் பண்ணையிலிருந்து சந்தை வழியாக நுகர்வோருக்கு பாதுகாப்பான மற்றும் தரமான தயாரிப்புகளை கொண்டு செல்ல முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அ.கீர்த்திவாசன், திருச்சி, TNAPEx மண்டல மையம் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு மையத்தின் திட்ட மேலாளர் மற்றும் குழுத் தலைவர், TNAPEx திட்டத்தின் மூலம் தொடக்க நிறுவனங்கள் மற்றும் MSME–களுக்கு வழங்கப்படும் விரிவான ஆதரவுகள் குறித்து விளக்கமளித்தார். புதிய தயாரிப்பு உருவாக்கம், உற்பத்தி வசதி அடையாளம் காணுதல், உற்பத்தி ஆதரவு, தயாரிப்பு பதிவு, உரிமம் பெறுதல், ஒழுங்குமுறை இணக்கம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடைமுறைகள், சந்தை இணைப்புகள், வாங்குபவர்–விற்பனையாளர் சந்திப்புகள், பிராண்டிங் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட முழுமையான சேவைகள் TNAPEx மூலம் வழங்கப் படுவதாக தெரிவித்தார். தொழில்முனைவோர் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி புதுமைகளை விரைவுபடுத்தி, தங்களது வணிகங்களை விரிவுபடுத்தி, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சந்தைகளை அடைய வேண்டும் என விரிவாக எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியின் நிறைவில், முனைவர் வி.ராஜன்பாபு, தாவர உயிரித் தொழில்நுட்பத் துறை உதவிப் பேராசிரியர் நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியின் வெற்றிக்கு பங்களித்த சிறப்பு விருந்தினர்கள், TNAPEx அதிகாரிகள், தொழில்முனைவோர், பங்கேற் பாளர்கள் மற்றும் காக்ஸ்பிட் ஒருங்கிணைப்புக் குழுவினருக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

# அலங்காநல்லூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஜூன் 6

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் அழகாபுரி கிராமத்தில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 06.6.26ம் தேதி அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில நெற்பயிரிடும் 40 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன் அவர்கள் விளைநிலம் பாதுகாப்போம் இயக்கம் KHET BACHAO ABHIYAN கேத் பச்சோ அபியான இயக்கத்தின் மூலம் இயற்கை விவசாயம் மற்றும் மண்வள பாதுகாப்பு விவசாயிகள் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாமில் எடுத்துக் கூறியதாவது



சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல், மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், மண்வளம் மற்றும் சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் சாகுபடி செலவை குறைப்பது, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது, பசுந்தாள் உரப்பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்கள்.

அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை அலுவலர் மு.வசந்தகுமார், விவசாயிகளின் தனித்துவ அடையாள எண் (Farmer Registry) பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப்பாசன திட்டம், மத்திய மாநில அரசின் மூலமாக கிடைக்கும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் குணசேகரன், பேசுகையில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாணமை முறைகளான தழைச்சத்து, சாம்பல்சத்து, மணிச்சத்து முறைகள், இரண்டாம் துணைநிலை சத்துக்கள், நுண்ணூட்டச் சத்துகள் எவ்வாறு பயிர்களுக்கு இடுவது பற்றியும் அதன் பயன்பாட்டு நன்மைகள் குறித்த தொழில்நுட்பங்கள்,ஊட்டசத்து பற்றாக்குறைகள் மற்றும் அதன் நிவர்த்தி முறைகள், பசுந்தாள் உரமிடுதல் பயன்பாடுகள், பஞ்சகாவ்யம், மீன் அமினோ அமில கரைசல், மஞ்சள் வண்ண அட்டை, விளக்கு பொறி, இனக்கவர்ச்சி பொறி, வேப்பங்கொட்டை கரைசல் தெளிப்பு, விளக்கு பொறி, இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா ரைசோபியம், ஆகியவற்றினை பயன்படுத்துமாறும் முக்கியமாக விவசாயிகள் அனைவரும் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துமாறும் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்றிடலாம் என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் காதர் மொகைதீன், வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் அலங்காநல்லூர் வட்டார தொழில்நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சௌந்தரராஜன் மற்றும் வசந்தி ஆகியோர் செய்திருந்தனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# உலக உணவு பாதுகாப்பு தினம் இன்று

ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 7ஆம் தேதி உலக உணவு பாதுகாப்பு தினம் (WORLD FOOD SAFETY DAY), உலகளாவிய அளவில் அனுசரிக்கப்படுகிறது. பாதுகாப்பான ஊட்டச்சத்துகள் நிறைந்த உணவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும் உணவு மூலமாக பரப்பும் நோய்களைத் தடுக்கவும் ஐ.நா சபையால் இந்த நாள் ஏற்படுத்தப்பட்டது.

**உணவின் முக்கியத்துவம்?**

உலகம் முழுவதும் மனிதனின் அடிப்படைதேவைகளில் முதலிடத்தில் உள்ளது உணவே. ஆடை, இருப்பிடம் போன்ற அத்தியாவசிய தேவைகள் கூட இல்லாமல் வாழலாம். ஆனால் உணவின்றி உயிர் வாழ முடியாது. அன்று உணவுக்காக உழைத்தார்கள். இன்று உழைப்பும் உணவும் சுருங்க விட்டது. காரணம் அவசர உலகத்தில் உண்ண நேரமில்லாததால் ஓடி ஓடி போய்கின்றனர். பாதுகாபற்ற உணவு முறைகள் பலர் நாக்குக்க (சுவைக்கு) அடிமையாகி கண்ட கண்ட உணவுகளை நேரங்காலம் பார்க்காமல் உண்ணுகின்றனர், அதுவும் பயங்கர ஸ்பீடாக.

**உணவே மருந்து**

அன்று உணவே மருந்தாக இருந்தது, ஆனால் இன்று மருந்தே உணவாக மாறிவிட்டது. எடுத்துக்காட்டாக 50-60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தினமும் மருந்து மாத்திரைகளை உண்ணுகின்றனர். உணவே மருந்தாக இருந்த காலம் போய் இன்று மருந்தே உணவாகி மாறி விட்டது. என்ன செய்ய. தரமற்ற உணவுகளை உண்ணுவதால் ஏறக்குறையாக 200 வகையான நோய்கள் வர வாய்ப்புள்ளதாக மருத்துவ உலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. சரிவிகித சத்தான உணவை மறந்து விடுகிறோம். ஆனால் பாஸ்ட் புட், போன்ற துரித உணவை தான் இன்றைய இளைய தலைமுறைகள் விரும்புகின்றனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

**இந்த ஆண்டிற்கான கருப்பொருள் (THEMES) என்ன?**

'சுமையிலிருந்து தீர்வுகள் வரை எங்கும் பாதுகாப்பான உணவு (FROM BURDEN TO SOLUTIONS SAFE FOOD EVERY WHERE) என்பதாகும். உணவு பாதுகாப்பை உறுதி செய்வதுடன் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்திட இந்த நாளில் உறுதி கொள்ளுவோம்.

எனவே உணவு பாதுகாப்பு என்பது நமது தலைமுறைக்கு மட்டு மின்றி அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்ல வேண்டும். எனவே இனியாவது கண்ட கண்ட உணவுகளை (பிட்சா, பர்கர், புரோட்டா, சவர்மா) தவிர்த்து ஆரோக்கியமான நமது பழங்கால உணவு பழக்க வழக்கங்களை மேற்கொள்ள இந்த நாளில் உறுதி எடுப்போம். ***நீங்க தயாரா? நான் தயார்?***

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பெருந்துறை வட்டாரத்தில் புதிய சன்ன இரக நெல் பயிர் சாகுபடி குறித்த விவசாயிகள் பயிற்சி

ஈரோடு, ஜீன் 6



ஈரோடு வட்டாரம், பெருந்துறை வட்டாரம், வேளாண்மை – உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் பாண்டியம்பாளையம் வருவாய் கிராமத்தில் 05.06.26 அன்று உழவர்களுக்கு புதிய சன்ன இரக நெல் இரகங்கள் குறித்த சாகுபடி பயிற்சி பெருந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் ச.கலைச்செல்வி தலைமையில் நடைப்பெற்றது.

அப்போது அவர் பேசுகையில், வேளாண் இடுபொருட்களின் மானிய விபரங்களையும் நெல் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தம் முறை குறித்தும் தெளிவாக விளக்கினார். பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் முனைவர்.ச.விக்னேஸ்வரி பேசுகையில், புதிய நெல் ரகங்கள் பற்றியும் அவற்றின் குணா திசயங்கள் முக்கிய பூச்சிகள் மற்றும் நன்மை பயக்கும் நுண்ணு யிரிகளை அடையாளம் காணுதல் சுற்றுச்சூழல் வரையறுத்தல் பொருளாதார வரம்புகளை உருவாக்குதல் பற்றி கூறினார்.

வேளாண் அறிவியல் நிலையத்தை சார்ந்த பிரேமலதா, பேசு கையில் மண் பரிசோதனை மூலம் உர மேலாண்மை மேற் கொள் வதன் அவசியம் குறித்தும் ஒவ்வொரு பயிர் சாகுபடி செய் வதற்கு முன்பும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து கொண்டு அதன் அடிப்படையில் உரமிட வேண்டும் என்பதை வலியுறுத்தி கூறினார். உதவி தோட்டக்கலைத் அலுவலர் பார்த்திபன் பேசு கையில் PM Kisan மற்றும் விவசாய அடையாள எண் பற்றிய விவரங்களை கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விசுவநாதன் மற்றும் தாமோதரன் அட்மா திட்டத்தில் செயல் படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைத் தனர். இப்பயிற்சிக்கான மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.




# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "MSME-களுக்கான உணவுப் பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் இணக்கப்பாடு" என்ற தலைப்பில் சிறப்புரை

கோயம்புத்தூர், ஜூன் 6

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), கோயம்புத்தூரில் செயல்படும் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் (COXBIT), 05.06.26 அன்று - MSME-களுக்கான உணவுப் பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் இணக்கப்பாடு - என்ற தலைப்பில் சிறப்புரையை வழங்கியது. பத்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உணவுப் பதப்படுத்தல் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் துறையில் தேர்வு செய்யப்பட்டு TNAPEx-RAMP திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவு வழங்கப்பட்ட M/s. Aviva Organics Stores, M/s. Bublbox E-Retail Private Limited, M/s. Thennaivanam, M/s. CroptwinAgro Tech Pvt. Ltd., M/s. Nature Mills Pvt. Ltd., M/s. Sherpa Biotech, M/s. Microgreens Seed Disc, M/s. Ziwwit Sustainable Technologies Pvt. Ltd., M/s. Myco Enrich Foods மற்றும் M/s. Pechi Foods நிறுவனங்கள்பங்கு பெற்றனர்.

நிகழ்ச்சிக்கு வரவேற்புரையாற்றிய முனைவர் ஈ.கோகிலாதேவி, பேராசிரியரும் துறைத் தலைவரும் COXBIT நிறுவனத்தின், இயக்குநர் குழு உறுப்பினருமான, உணவுப் பாதுகாப்பு, தர உறுதி மற்றும் மதிப்புக்கூட்டல் ஆகியவை உணவுப் பதப்படுத்தல் துறையின் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டில் தொழில்முனைவோரை உருவாக்குவதற்கும் முக்கிய பங்காற்றுகின்றன என்பதை வலியுறுத்தினார்.




தலைமை உரையாற்றிய முனைவர் ந.செந்தில், COXBIT மற்றும் CPMB & B இயக்குநர், உணவுப் பாதுகாப்பு

விதிமுறைகளைப் பின்பற்றுவது தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துவதோடு, நுகர்வோர் நம்பிக்கையையும் சந்தைப் போட்டித் திறனையும் உயர்த்துகிறது எனக் குறிப்பிட்டார். மேலும், உயிரித் தொழில்நுட்பம், வேளாண்மை, உணவுப் பதப்படுத்தல் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட தயாரிப்புகள் துறைகளில் செயல் படும் தொழில்முனைவோர், தொடக்க நிறுவனங்கள் மற்றும் MSME–களுக்கு ஆதரவளிக்கும் வகையில் COXBIT மேற்கொண்டு வரும் பல்வேறு முயற்சிகளையும் விளக்கினார்.

ஜெ.மோகன்தாஸ், உணவுப் பாதுகாப்புத் துறை அலுவலர், கோயம்புத்தூர் நிபுணர் உரையை வழங்கினார். அவர் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் (FSSAI) வகுத்துள்ள விதிமுறைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பு இணக்கப்பாடு தொடர்பான தேவைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த அமர்வில் சுகாதார நடைமுறைகள், உணவுப் பொருட்களின் பொதியிடல் மற்றும் லேபிள் தரநிலைகள், பாதுகாப்பான உணவுக் கையாளும் முறைகள், ஏற்றுமதி நோக்கிலான உணவுப் பாதுகாப்புச் சான்றிதழ்கள், ஆவணப் படுத்தல் தேவைகள் மற்றும் MSME–களுக்கான ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் போன்ற முக்கிய அம்சங்கள் விவாதிக்கப் பட்டன. மேலும், தயாரிப்புகளின் தரத்தை மேம் படுத்துதல், ஒழுங்குமுறை இணக்கப்பாட்டை உறுதி செய்தல், நுகர்வோர் நம்பிக்கையை வளர்த்தல் மற்றும் தேசிய, சர்வதேச தரநிலைகளைப் பின்பற்றுவதன் மூலம் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் குறித்த சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் உரையாற்றிய நிபுணருடன் கலந்துரையாடி, உரிமம் பெறும் நடைமுறைகள், சான்றிதழ்கள், உணவு வணிக விதிமுறைகள் மற்றும் தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான தங்களது சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றனர்.

நிகழ்ச்சியின் நிறைவில், முனைவர் வி.ராஜன்பாபு, உதவிப் பேராசிரியர் (DPB) நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியின் வெற்றிக்கு பங்களித்த சிறப்பு விருந்தினர்கள், நிபுணர் பேச்சாளர், MSME பிரதிநிதிகள், TNAPEx RAMP திட்டக் குழுவினர் மற்றும் COXBIT ஏற்பாட்டுக் குழுவினருக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு விவசாயிகளுக்கான சிறப்பு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது



ஈரோடு, ஜூன் 6

டி.ஸ்டேன்ஸ், பொய்கை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் அக்ரி கனெக்ட் தமிழ்நாடு இணைந்து உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு விவசாயிகளுக்கான சிறப்பு விழிப்புணர்வு கூட்டம் நடத்தியது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 ஆம் தேதி உலகம் முழுவதும் உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப் படுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், இயற்கையை பாதுகாக்கும் செயல்பாடுகளை ஊக்குவிப்பதும் இந்நாளின் முக்கிய நோக்கமாகும். ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) முன்னெடுத்த இந்த உலகளாவிய இயக்கம், மக்கள் அனைவரும் சுற்றுச்சூழலுக்கு பொறுப்பான நடைமுறைகளைப் பின்பற்றி, தூய்மையான, பசுமையான மற்றும் நிலையான உலகை உருவாக்க ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

**இந்த ஆண்டிற்கான உலக சுற்றுச்சூழல் தினக் கருப்பொருள் :** “இயற்கையால் ஊக்கமளிக்கப்பட்டது – காலநிலைக்காக – நமது எதிர்காலத்திற்காக” (Inspired By Nature | For Climate | For Our Future) இதனை முன்னிட்டு, டி.ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட், பொய்கை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் (FPO) மற்றும் அக்ரி கனெக்ட் தமிழ்நாடு ஆகியவை இணைந்து, ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடியில் விவசாயிகளுக்கான சிறப்பு விழிப் புணர்வு கூட்டத்தை ஏற்பாடு செய்தன. இந்நிகழ்வில் சுமார்40–க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வத் துடன் பங்கேற்று, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான வேளாண்மை குறித்த கருத்துக் களை பகிர்ந்து கொண்டனர்.

இயற்கை வளங்களையும் சுற்றுச்சூழலையும் நேரடியாக சார்ந்துள்ள முக்கியத் துறைகளில் வேளாண்மை முதன்மை யானதாகும். காலநிலை மாற்றம், மண்வளம், நீர் கிடைப்புத் தன்மை போன்ற காரணிகள் ஒவ்வொரு பருவத்திலும் பயிர் சாகுபடியின் வெற்றியை நிர்ணயிக்கின்றன.

இதனை கருத்தில் கொண்டு நடைபெற்ற இந்த நிகழ்வில், விவசாயத் துறையில் நிலவும் முக்கிய சவால்கள், சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய முறைகள், வேளாண் இடுபொருட்களின் பொறுப்பான பயன்பாடு, நிலையான வளர்ச்சி இலக்குகளில் (SDGs) விவசாயிகளின் பங்கு மற்றும் இயற்கை உரங்கள், உயிர் உரங்களின் அவசியம் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் டி.ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனிலி மிடெட் நிறுவனத்திலிருந்து வனிதா ராஜம் (மார்க்கெட்டிங் மேனேஜர்) மற்றும் கௌரிசங்கர் (மண்டல மேலாளர்), ஆகியோர் பங்கேற்று, சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண் இடுபொருட்களின் பயன்பாடு மற்றும் எதிர்கால வேளாண்மையில் உயிரியல் தொழில் நுட்பங்களின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்தனர். மேலும், பொய்கை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்தின் தலைவர் பொன்னுசாமி, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வேலுச்சாமி மற்றும் நந்திவர்மன், தலைமைச் செயல் அலுவலர் மணிகண்டன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வை அக்ரி கனெக்ட் தமிழ்நாடு சார்பில் சம்யுக்தா, சுபாஷ் மற்றும் ஈஸ்வரன் ஆகியோர் ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தினர். நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது கருத்துகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப் பட்டதுடன், மரக்கன்று நடும் நிகழ்வும் நடைபெற்றது.

தற்போது வேளாண்மைத் துறை – பசுமைப்புரட்சியிலிருந்து நிலைத்த பசுமைப்புரட்சியை (Evergreen Revolution) நோக்கி – நகர்ந்து வரும் நிலையில், இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. இத்தகைய சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்கள், அதிக அளவிலான இரசாயன உரங்கள் மற்றும் செயற்கை பூச்சிக் கொல்லி பயன்பாட்டினால் ஏற்படும் மண்வளக் குறைவு, சுற்றுச் சூழல் மாசுபாடு மற்றும் விவசாயிகள், நுகர்வோரின் ஆரோக்கிய பாதிப்புகளை குறைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.

இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், விவசாயிகளும் நுகர் வோரும் சுற்றுச்சூழலுக்கு பொறுப்பான நடைமுறைகளைப் பின் பற்றும் மனப்பாங்கை உருவாக்குவதோடு, வருங்கால தலைமுறை களுக்காக ஆரோக்கியமான, பசுமையான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்க வழிவகுக்கும் என நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## *உலகச் சுற்றுச்சூழல் தினம் 2026*

கோயம்புத்தூர், ஜூன் 6

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இயற்கை வள மேலாண்மை இயக்ககத்தின் கீழ் இயங்கும், சுற்றுச்சூழல் அறிவியல் துறை சார்பாக, ஜூன் 5, 2026 அன்று “இயற்கையிலிருந்து ஊக்கம் பெறுவோம்! காலநிலைக்காக! நமது எதிர்காலத்திற்காக!” என்ற முக்கியத் தலைப்பை மையமாகக் கொண்டு, பல்வேறு நிகழ்ச்சிகளுடன் உலகச் சுற்றுச்சூழல் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.




தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் கா.சுப்பிரமணியன், உலகச் சுற்றுச்சூழல் தினம் 2026 கொண்டாட்டங்களுக்குத் தலைமை தாங்கினார். சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்காக, மனிதச் சங்கிலி நிகழ்வு கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் சிறப்பம்சமாக, துணிப்பை விநியோகிக்கும் தானியங்கி இயந்திரம் பல்கலைக் கழக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, மரம் வளர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்தான விழிப்புணர்வின் அவசியத்தை வலியுறுத்தி, பலன் தரும் மரக் கன்றுகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் துவக்கமாக, சுற்றுச்சூழல் அறிவியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவரான முனைவர் அ.பரணி, வரவேற்புரை வழங்கினார். இயற்கை வள மேலாண்மை இயக்ககத்தின் இயக்குநர் முனைவர் சு.கார்த்திகேயன், உலகச் சுற்றுச்சூழல் தினம் குறித்த சில சிந்திக்க வைக்கும் கருத்துக்களைப் பகிர்ந்து துவக்கவுரை வழங்கினார். மேலும், மாணவர் நல மையத்தின் முதன்மையர் ஞா.பாலசுப்பிரமணியன், சிறப்புரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து, வி.திருநாவுக்கரசு. உலகச்சுற்றுச்சூழல் தினம் குறித்த ஆழமான கருத்துகளை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கி சிறப்பானதொரு தலைமையுரை வழங்கினார்.

இவ்விழாவில் பல்கலைக்கழக இளங்கலை மற்றும் முதுகலை மாணவ மாணவியர் பல்வேறு போட்டிகளில் பங்கேற்றனர். ஓவியப் போட்டி, கவிதைப்போட்டி, புதையல் வேட்டை, விளம்பர நாடகப் போட்டி, மீம்போட்டி, மற்றும் மாதிரி பசுமைத் தீர்ப்பாயம் முதலிய போட்டிகள் அடங்கும். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கவுரவிக்கப் பட்டது. இந்நிகழ்வுகள் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்த்ததோடு மட்டுமல்லாமல், சுற்றுச்சூழல் நிர்வாகத்தின் முக்கியத்துவத்தையும் உணர்த்தின. இறுதியாக, இந்நிகழ்வில் பங்கேற்ற அனைவரின் கூட்டு முயற்சிகளையும் ஆர்வத்தையும் பாராட்டி, பேராசிரியர் முனைவர் மோ.பிரசாந்த்ராஜன் நன்றியுரை வழங்க, விழா இனிதே நிறைவடைந்தது.

நாம் உலக சுற்றுச்சூழல் நாளைக் கொண்டாடும் இவ்வேளையில், மாற்றம் என்பது நம் ஒவ்வொருவரிடமிருந்தும் தொடங்குகிறது என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும்.

சிறிய நிலையான செயல்பாடுகளின் மூலம் நாம் அனைவரும் ஒன்றிணைந்து நம் சுற்றுச்சூழலைக்காக்கவும், இயற்கை சார்ந்த வளர்ச்சிகளை முன்னெடுத்து, பருவநிலை மாற்றத்தைத் தடுக்க முடியும். வருங்கால சந்ததியினருக்காக நமது பூமியைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு தனிமனிதனின் பங்களிப்பும் இன்றியமையாதது. நாம் அனைவரும் ஒன்றிணைந்தால் நிச்சயம் ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# செடி முருங்கை சாகுபடியில் விதை பரிசோதனை அவசியம்!

முருங்கை ஒரு கோடைகால பயிர். இதுவெப்பமண்டலப் பகுதிகளில் நன்கு வளரக்கூடியது. மேலும், வறட்சியைத் தாங்கி வளர்வதுடன் அதிக விளைச்சலும் கொடுக்கக்கூடியது. பூக்கும் தருணத்தில், மழை இருந்தால் விளைச்சல் மிகவும் பாதிக்கப் படும். இப்பயிருக்கு நல்ல வளமான வடிகால் வசதியுள்ள மணல் கலந்த செம்மண் அல்லது கரிசல் மண் நிலம் சாகுபடிக்கு ஏற்றவை. முருங்கை இரண்டு முறையில் பயிர் பெருக்கம் செய்யப்படுகிறது. பல்லாண்டு முருங்கை தண்டு போத்து மூலமாகவும், செடி முருங்கை விதைகள் மூலமாகவும் பயிர் பெருக்கம் செய்யப்படுகிறது.

செடி முருங்கை கோடைகாலத்தில் பூப்பதற்கு ஏற்ப செப்டம்பர் – அக்டோபர் (புரட்டாசி–ஐப்பசி) மாதங்களில் பயிரிடுவது நல்லது. மேலும், ஜூலை (ஆடிப்பட்டம்) மாதத்திலும் விதைகளை நடவு செய்யலாம். செடி முருங்கையில் நன்கு முற்றிய காய்களை அறுவடை செய்து, காய வைத்து விதை களை பிரித்தெடுக்க வேண்டும். தரமான விதைகளை தேர்வு செய்து சுமார் 15 செ.மீ நீளமும், 10 செ.மீ அகலமும் உள்ள மக்கும் பைகளில் விதைத்து நாற்றுக்களாக வளர்த்து ஒரு மாதம் முடிந்த பின்பு நடவினை மேற் கொள்ளலாம். வழக்கமான நீர் மேலாண்மை, களை மேலாண்மை, உர மேலான்மை, பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும்.

**நுனி கிள்ளுதல் :** செடிகள் 60 செ.மீ உயரம் (நடவு செய்த மூன்றாவது மாதம்) வளர்ந்தவுடன் துளிர் நுனியைக் கிள்ளிவிட வேண்டும். இவ்வாறு செய்வதால் பக்கக் கிளைகள் தோன்றி அதிக காய்கள் உற்பத்தியாகும். தேவைப்பட்டால் மறுமுறையும் 4 அடி உயரத்தில் நுனிகளைக் கிள்ளி விடலாம். நடவு செய்த மூன்று முதல் நான்கு மாதங்கள் வரை அல்லது கிளைகள் படர்ந்து நிழல் அதிகரிக்கும் வரை, குறுகிய காலப் பயிர்களான, தட்டைப்பயிறு, உளுந்து, பாசிப்பயறு, வெண்டை, கீரை மற்றும் வெங்காயம் போன்ற பயிர்களை, ஊடுபயிராக சாகுபடி செய்ய லாம். செடி முருங்கை விதைத்த ஆறு மாதங்களில் அறு வடைக்கு வரும். மேலும், அறுவடைப் பருவம் இரண்டு முதல் மூன்று மாதங்கள் வரை நீடிக்கும். காய்களை மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம்.

செடி முருங்கை விதைகளை விதைப்பதற்கு முன்னர், முளைப்புத்திறன் பரிசோதனை செய்து, விதைப்பது அவசியம்.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் மற்றும் விதை விற்பனை யாளர்கள் தூத்துக்குடி எட்டையபுரம் ரோட்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் செயல்படும் விதை பரிசோதனை ஆய்வகத்திற்கு விதைகளை ரூ.80/- கட்டணத்துடன் அனுப்பி பரிசோதனை முடிவுகளை தெரிந்து கொள்ளலாம் என திருநெல்வேலி, விதை பரிசோதனை அலுவலர், ஞா.ஆனந்தி ராதிகா மற்றும் தூத்துக்குடி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சேக் நூஹ் ஆகியோர் தெரிவித்தனர்.




# பயிர் மேம்பாட்டில் நானோ தொழில்நுட்பத்தின் பங்கு

உலக மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் உணவுப்பொருட்களின் தேவை பெருமளவில் உயர்ந்து வருகிறது. அதே நேரத்தில் காலநிலை மாற்றம், மண் வளக் குறைபாடு, நீர்ப்பற்றாக்குறை, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் போன்ற சவால்கள் வேளாண் உற்பத்தியை பாதிக்கின்றன. இந்நிலையில் அதிக மகசூல், சிறந்த தரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண்மையை உருவாக்க நவீன தொழில்நுட்பங்கள் தேவைப் படுகின்றன. அவற்றில் மிக முக்கியமான ஒன்றாக நானோ அறிவியல் மற்றும் நானோ தொழில்நுட்பம் விளங்குகிறது. நானோ தொழில்நுட்பம் என்பது 1 முதல் 100 நானோ மீட்டர் அளவிலான துகள்களைப் பயன்படுத்தி புதிய பயன்பாடுகளை உருவாக்கும் அறிவியல் துறையாகும். இந்த நுண்ணிய துகள்கள் தாவரங் களுடன் எளிதில் தொடர்பு கொண்டு, ஊட்டச்சத்து மேலாண்மை, நோய் கட்டுப்பாடு, மரபணு மேம்பாடு மற்றும் மகசூல் உயர்வு போன்ற பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றன.

### நானோ உரங்கள் (Nano Fertilizers)

பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை திறமையாக வழங்குவதில் நானோ உரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.



வழக்கமான உரங்களில் பெரும்பாலான சத்துக்கள் கழிவாக மண்ணில் தங்கி விடுகின்றன அல்லது நீரால் அடித்துச் செல்லப்படு கின்றன. ஆனால் நானோ உரங்கள் சத்துக்களை மெதுவாகவும் கட்டுப்படுத்தப்பட்ட முறையிலும் வெளியிடுகின்றன.

**நன்மைகள்**

- உர பயன்பாட்டுத் திறன் அதிகரிக்கிறது.
- உரச் செலவு குறைகிறது.
- சுற்றுச்சூழல் மாசுபாடு குறைகிறது.
- மகசூல் மற்றும் விளைபொருள் தரம் மேம்படுகிறது.

**சாதனை**

இந்தியாவில் உருவாக்கப்பட்ட நானோ யூரியா உலகின் முதல் வணிக ரீதியான நானோ உரமாகும். இது நைட்ரஜன் பயன்பாட்டுத் திறனை அதிகரித்து, வழக்கமான யூரியாவின் பயன்பாட்டைக் குறைக்க உதவுகிறது.

**விதை முளைப்பு மற்றும் நாற்று வளர்ச்சி**

நானோ துகள்கள் விதைகளின் நீர் உறிஞ்சும் திறனை மேம் படுத்தி, விரைவான மற்றும் ஒரே மாதிரியான முளைப்பு ஏற்படுத்து கின்றன. நானோ விதை நேர்த்தி (Nano Priming) தொழில்நுட்பம் விதை வீரியத்தை உயர்த்துகிறது.

**பயன்கள்**

- அதிக முளைப்பு சதவீதம்
- வலுவான வேர் வளர்ச்சி
- ஆரோக்கியமான நாற்றுகள்
- சீரான பயிர் நிலை நிறுத்தம்

துத்தநாக (ZnO) மற்றும் சிலிகான் நானோ துகள்கள் அரிசி, கோதுமை மற்றும் பயறு வைககளில் சிறந்த விளைவுகளை அளித்துள்ளன.

**பயிர் வளர்ச்சி மற்றும் மகசூல் அதிகரிப்பு**

நானோ துகள்கள் தாவரங்களில் ஒளிச்சேர்க்கை திறனை அதிகரித்து, குளோரோபில் உற்பத்தியை மேம்படுத்துகின்றன. இதன் மூலம் தாவர வளர்ச்சி வேகமைடந்து அதிக உயிர்த்தொகை மற்றும் மகசூல் கிடைக்கிறது.

**விளைவுகள்**

- அதிக ஒளிச்சேர்க்கை
- மேம்பட்ட சத்து உறிஞ்சுதல்

- அதிக பூப்பிடித்தல்
- உயர்ந்த தானிய மற்றும் பழ மகசூல்

நானோ துத்தநாகம் மற்றும் நானோ இரும்பு பயன்பாடு பல தானியப் பயிர்களில் மகசூல் அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**வறட்சி மற்றும் உப்பு அழுத்தத் தாங்கும் திறன்**

காலநிலை மாற்றத்தால் வறட்சி மற்றும் உப்புத்தன்மை போன்ற சூழல் அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. நானோ தொழில் நுட்பம் தாவரங்களுக்கு இத்தைகய அழுத்தங்கைளத் தாங்கும் திறனை வழங்குகிறது.

**வறட்சி மேலாண்மை**

- நீர் பயன்பாட்டுத் திறன் அதிகரிப்பு
- இலை வாடுதல் குறைதல்
- வேர் வளர்ச்சி மேம்பாடு

**உப்புத்தன்மை மேலாண்மை**

- சோடியம் நச்சுத்தன்மை குறைதல்
- ஊட்டச்சத்து சமநிலை பராமரிப்பு
- மகசூல் இழப்பு குறைதல்

சிலிகான் நானோ துகள்கள் நெல் மற்றும் கோதுமையில் வறட்சி மற்றும் உப்பு அழுத்தத்தை குறைப்பதில் சிறந்த பலைன அளித்துள்ளன.

**நோய் மற்றும் பூச்சி மேலாண்மை**

பயிர் இழப்புகளுக்கான முக்கிய காரணிகளில் பூச்சி மற்றும் நோய்கள் முக்கியமானைவ. நானோ பூச்சிக்கொல்லிகள் மற்றும் நானோ ஞ்சைக்கொல்லிகள் குறைந்த அளவிலேயே அதிக செயல்திறன் கொண்டைவ.

**நன்மைகள்**

- குறைந்த வேதிப்பொருள் பயன்பாடு
- இலக்கு உயிரினங்கைள மட்டுமே தாக்குதல்
- நீண்டகால செயல்திறன்
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு

வெள்ளி (Silver) மற்றும் தாமிர (Copper) நானோ துகள்கள் பல்வேறு நோய்க்கிருமிகைள கட்டுப்படுத்துவதில் வெற்றி கரமாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

## மரபணு மேம்பாட்டில் நானோ தொழில்நுட்பம்

நவீன தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபணு பொறியியலில் நானோ தொழில்நுட்பம் புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. நானோ துகள்கள் DNA, RNA மற்றும் பிற உயிரியல் மூலக் கூறுகளை தாவர செல்களுக்கும் கொண்டு செல்ல உதவுகின்றன.

### பயன்பாடுகள்

- மரபணு மாற்றம்
- ஜீன் பரிமாற்றம்
- CRISPR அடிப்படையிலான ஜீன் திருத்தம்
- புதிய ரகங்கள் உருவாக்கம்

இது நோய் எதிர்ப்பு, வறட்சி தாங்கும் திறன் மற்றும் அதிக மகசூல் கொண்ட புதிய பயிர் ரகங்களை உருவாக்க உதவுகிறது.

## நானோ உயிருணரிகள் (Nano Biosensors)

நானோ உயிருணரிகள் தாவரங்களில் ஏற்படும் சத்து குறைபாடு, நீர் பற்றாக்குறை மற்றும் நோய் தாக்குதல்களை ஆரம்ப நிலையி லேயே கண்டறிய உதவுகின்றன.

### பயன்கள்

- துல்லியமான வேளாண்மை
- சரியான நேரத்தில் மேலாண்மை நடவடிக்கைகள்
- செலவு குறைப்பு
- விளைச்சல் அதிகரிப்பு

இத்தொழில்நுட்பம் எதிர்கால ஸ்மார்ட் வேளாண்மையின் முக்கிய கூறாக கருதப்படுகிறது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



## ஊட்டச்சத்து செறிவூட்டல் (Biofortification)

மனிதர்களின் நுண்ணூட்டச்சத்து குறைபாட்டை போக்க நானோ உரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நானோ துத்தநாகம் மற்றும் நானோ இரும்பு பயன்பாடு தானியங்களில் துத்தநாகம் மற்றும் இரும்புச் சத்து அளவை அதிகரிக்கிறது.

### நன்மைகள்

- உணவின் ஊட்டச்சத்து தரம் மேம்பாடு
- மறைமுக பசியை (Hidden Hunger) குறைத்தல்
- மனித ஆரோக்கிய மேம்பாடு

### எதிர்கால வாய்ப்புகள்

எதிர்காலத்தில் நானோ தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு (AI), உயிரித் தொழில்நுட்பம் மற்றும் துல்லிய வேளாண்மையுடன் இணைந்து மேலும் பல முன்னேற்றங்களை உருவாக்கும்.

### எதிர்பார்க்கப்படும் வளர்ச்சிகள்


- ஸ்மார்ட் நானோ உரங்கள்
- நானோ அடிப்படையிலான ஜீன் திருத்தம்
- மேம்பட்ட நானோ உயிருணரிகள்
- காலநிலை மாற்றத்தைத் தாங்கும் பயிர்கள்
- நிலையான வேளாண்மை முறைகள்

### முடிவுரை

நானோ அறிவியல் மற்றும் நானோ தொழில்நுட்பம் வேளாண்மையில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. நானோ உரங்கள், நானோ பூச்சிக்கொல்லிகள், நானோ உயிருணரிகள் மற்றும் நானோ மரபணு தொழில்நுட்பங்கள் மூலம் பயிர் உற்பத்தி, தரம் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவை மேம் படுத்தப்படுகின்றன.

உலகளாவிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும், காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்வதிலும் நானோ தொழில்நுட்பம் எதிர்கால வேளாண்மையின் முக்கிய கருவியாக விளங்கும்.

தகவல் : ***வெங்கடேஷ் ம, உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா.ரா மற்றும் பாமா.ம (இளங்கலை வேளாண் மாணவி), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.***


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333